செ.வெ.எண்: 32/ஜூன் நாள்: 15.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான 1425-ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயக் கணக்கு தணிக்கை முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (15.06.2016) பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை முகாம் வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த தணிக்கை முகாமில் பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களைச் சார்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 8 வருவாய் வட்டங்களில் உள்ள 400 வருவாய் கிராமங்களுக்கு 1425 - ஆம் ஆண்டு வருவாய்த் தீர்வாயக் கணக்குகள் 15.06.2016 முதல் 24.06.2016 வரை அந்தந்த வட்டங்களில் உள்ள வட்டாட்சியர் அலுவலங்களில் நடைபெறுகிறது. இக்கணக்கு தணிக்கை நிகழ்ச்சியின் போது தனிநபர் மனுக்களான திருமண நிதியுதவித் திட்டம், முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல் மனுக்களும், பொதுநல மனுக்களான சாலைவசதி, போக்குவரத்துவசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கலாம். தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்படும்.

பரமக்குடி வட்டத்தில் 93 வருவாய் கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களுக்கான 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை இன்று (15.06.2016) முதல் 17.06.2016 வரையிலும் மற்றும் 21.06.2016 முதல் 24.06.2016 வரை (7 நாட்கள்) நடைபெறுகிறது. இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1425 - ஆம் பசலி ஆண்டு வருவாய்த் தீர்வாயக் கணக்கு தணிக்கை முகாம் நடைபெறுகிறது. தொடர்ந்து கணக்கு தணிக்கை நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை மற்றும் அந்தந்த கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகளை மனுக்களாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தணிக்கை நடைபெறும் நாட்களில் நேரடியாக வந்து வழங்கலாம். தகுதியான மனுக்கள் மீது ஆய்வு செய்யப்பட்டு உடனடி தீர்வு காணப்படும். எனவே பொதுமக்கள் அனைவரும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி பயன்பெறலாம்.

அதன்பின்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கும் அரசு பொது இ-சேவை மையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி வட்டாட்சியர் திரு.செய்யது முகமது, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.டி.மீனாட்சி சுந்தரம், மண்டல துணை வட்டாட்சியர்கள் திரு.மீனாட்சி, திருமதி.வசுமதி, துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.சேகர், வட்ட வழங்கல் அலுவலர் திரு.சுவாமிநாதன் உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**